DINAMALAR

28 SEP 2022

PAGE 11

# துணைவேந்தர் பதவிக்காலம் மேலும் ஓராண்டு நீட்டிப்பு

**புதுச்சேரி,செப்.28–**

புதுச்சேரி பல்கலை துணை வேந்தர் குர்மீத் சிங் பதவிக்காலத்தை மேலும் ஓராண்டு நீட்டித்து மத்திய கல்வி அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.


குர்மீத் சிங்

புதுச்சேரி பல்கலை துணை வேந்தர் குர்மீத் சிங்கின் பதவிக் காலம் வரும் நவம்பர் 23 ம் தேதியுடன் முடிகிறது. அதனை யொட்டி, புதிய துணை வேந்தர் நியமிப்பதற்காகா, கல்வி அமைச்சகம், புதுச்சேரி பல்கலை செயற்குழுவில் உள்ள இருவரின் பெயரை பரிந்துரை செய்ய கூறியிருந்தது.

இந்நிலையில் துணைவேந்தர் குர்மீத் சிங், பதவி காலத்தை மேலும் ஓராண்டிற்கு நீட்டித்து மத்திய கல்வி அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. இதற்கான உத்தரவினை மத்திய கல்வி அமைச்சக உயர் கல்வித் துறை துறை செயலர் நவீன்குமார் நேற்று பிறப்பித்தார்.

தற்போது துணைவேந்தர் குர்மீத் சிங் புதுச்சேரி பல்கலை கல்வி மற்றும் நிர்வாக ரீதியாக அதன் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டில் முழுமையாக கவனம் செலுத்தியுள்ளார்.அவரது தலைமையின் கீழ் புதுச்சேரி பல்கலை உலக அளவிலும், தேசிய அளவிலும் தரவரிசை நிறுவனங்களால் வழங்கப்படும் தரவரிசையில் உயரியநிலையை அடைந்துள்ளது.

அவர், அண்மையில் தமிழ்நாடு காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலையின் துணைவேந்தராகப் கூடுதலாக பொறுப்பேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

DINAKARAN

28 SEP 2022

PAGE 14

# பல்கலை துணைவேந்தர் பதவி காலம் நீட்டிப்பு

புதுச்சேரி, செப். 28:



புதுவை பல்கலைக்கழக துணை வேந்தராக கடந்த 2017ம் ஆண்டு நவம்பர் 29ம் தேதி குர்மீத் சிங் பதவியேற்றுக்கொண்டார். அதன் பிறகு பல்கலைக்கழகத்தில் கல்வி, நிர்வாக ரீதியாக வளர்ச்சியில் கவனம் செலுத்தினார். அவரது தலைமையில் புதுவை பல்கலைக்கழகத்தை சர்வதேச மற்றும் தேசிய தரவரிசை நிறுவனங்களால் வழங்கப்படும் தரவரிசையில் மேம்படுத்தியுள்ளார். துணைவேந்தராக 5 ஆண்டுகள் பணி நிறைவு செய்யவுள்ள நிலையில் அவரது பதவி காலத்தை மேலும் ஓராண்டுக்கு ஜனாதிபதி நீட்டித்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பாக புதுவை பல்கலைக்கழக உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, புதுவை பல்கலைக்கழகத்தின் பார்வையாளர் என்ற வகையில், புதுவை பல்கலைக்கழக சட்டம் 1985ன் சட்டங்கள் 1Aன் ஷரத்து 4ன் விதியின்படி துணைவேந்தர் குர்மீத் சிங்கின் பதவி காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீடித்து உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த உத்தரவினை மத்திய கல்வி அமைச்சகம் மூலம் அறிவித்துள்ளது.

THE HINDU TAMIL

28 SEP 2022

PAGE 3

# புதுச்சேரி பல்கலை துணைவேந்தர் பதவிக்காலம் நீட்டிப்பு

**புதுச்சேரி**

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக துணைவேந்தரின் பதவிகாலம் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் பார்வையாளர். அதன் அடிப்படையில், புதுச்சேரி பல்கலைக்கழக சட்டப்படி தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங்கின் பதவிக்காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டுள்ளார். இவ்வுத்தரவினை மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

THE HINDU TAMIL

28 SEP 2022

PAGE 5

# சமுதாயக் கல்லூரியில் சேர செப். 30 வரை விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி

புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியில் இளங்கலை, முதுகலை மற்றும் பட்டயப்படிப்புகளில் சேர வரும் செப்டம்பர் 30 வரை விண்ணப்பிக்கலாம். இதுதொடர்பாக கல்லூரி முதல்வர் (பொறுப்பு) லலிதா ராமகிருஷ்ணன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியில் நடப்பு கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கைக்கு செப்டம்பர் 25-ம் தேதி வரை விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டன. பலரின் கோரிக்கையை ஏற்று வரும் 30-ம் தேதி வரை விண்ணப்பிக்கும் கால அளவை நீட்டித்துள்ளோம். புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியில் பல முக்கியப் படிப்புகள் உள்ளன. அதை கல்லூரி இணையத்தளத்தில் பார்க்கலாம் (http://pucc.edu.in). இக்கல்லூரியில் படித்த பலரும் அரசு மற்றும் தனியார் துறைகளில் நல்ல ஊதியத்துடன் பணிபுரிகின்றனர். ஏழை மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் நோக்கில் செயல்படுகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

MAALAI MALAR

28 SEP 2022

PAGE 8

# புதுவை துணைவேந்தர் பதவிக்காலம் மேலும் ஓராண்டு நீட்டிப்பு

புதுச்சேரி, செப்.28—

புதுவை பல்கலை துணை வேந்தர் குர்மீத் சிங்கின் பதவிக் காலம் நவம்பர் 23—ந் தேதியுடன் முடிகிறது.

அதனை யொட்டி, புதிய துணை வேந்தர் நியமிப்பதற்காக, கல்வி அமைச்சகம், புதுவை பல்கலை செயற்குழுவில் உள்ள இருவரின் பெயரை பரிந்துரை செய்ய கூறியிருந்தது.

இந்த நிலையில் துணைவேந்தர் குர்மீத் சிங், பதவி காலத்தை மேலும் ஓராண்டிற்கு நீட்டித்து மத்திய கல்வி அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. இதற்கான உத்தரவினை மத்திய கல்வி அமைச்சக உயர் கல்வித் துறை செயலர் நவீன்குமார் பிறப்பித்தார்.